2010 மே 12]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திருமதி டி. யசோதா.*

***திருமதி டி. யசோதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 149 முதல் 155 வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)*

8. அறிவிப்பு

தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010-ஐப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

9. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*